# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

(1889)

**பத்திரக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: | ஆ 1-க்கு | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா: | ,, | ரூ. 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: | ,, | ரூ. 9-40 |
| தனிப்பிரதி: | | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன்முறைக்கு:— | ஒருகலம் | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | கால்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு டை விகிதங்களிற் பாதி.

விளம்பரங்கள் முற்பண மனுப்பினுலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—ரு௫. } யாழ்ப்பாணம்:—இரத்தாட்சி ஆ வைகாசி மீ உ௩ உ (1924 ஜூன் 5) வியாழக்கிழமை. { இலக்கம்—௬௨.


உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்தவிநாயகன்றாள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## புத்தக விளம்பரம்.

தெல்லிப்பழை பிரமஸ்ரீ வித்துவான் சிவானந்தையரால், இயற்றிய புத்தகங்கள் என்னிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. தருக்கசங்கிரகம், நியாயபோதினி, பதகிருத்தியம், அன்னம்பட்டீயம், நீலகண்டீயம், சேர்ந்த கட்டுவிலை ரூபா 2 00
2. நம்பி அகப்பொருளுரை ரூபா 1 00
3. இரகுவமிசம் மூலமும் உரையும் முற்பாகம் ரூபா 1 சதம் 50
4. சனிதுதி விலை அணு 1
5. தசகாரியம் அணு 5

க. செல்லம்ஐயர்,
சிவன்கோவில் வடக்குத்தெரு,
வண்ணார்பண்ணை.

சண்முகநாதன் புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம். (H. 26.)

## "ஸ்ராண்டேர்ட்" கொழுக்கியோடுகள்.
### (Standard Tiles)

பின்வரும் நியாயங்கள் பற்றியே நாம் இந்த ஸ்ராண்டேர்ட் ஓடுகளைத் தருவித்து விற்கின்றேம்:—

முதலாவது, இந்தஓடுகள்மிகப்பாரக்குறைந்தனவும்.

இரண்டாவது, இவைகள்நெடுங்காலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கன.

மூன்றாவது, இந்த வட இலங்கையின் தேசசுவாத்தியத்திற்கு இயைந்தஓடுகள்இவைகளே யாம். இந்த ஓடுகள்உஷ்ணகாலங்களிற்குளிர்ச்சியையும் சீதளகாலங்களில் உஷ்ணத்தையும் தரும் தன்மையன.

இந்த ஓடுகளைச் சென்ற மூன்றுவருடகாலமாக நாம் தருவித்து விற்றுவருகின்றேம். இந்த மூன்றுவருட காலத்துள் நாங்கள் ஆச்சரியப்படத்தக்க விதமாக இவை செலவழிகின்றன. மற்றும் ஓடுகளிலும்பார்க்க இது சிறந்ததென்பதற்கு இந்த ஒருநியாயமுமே போதிய சான்றாகும்.

ஓடுகள்யாழ்ப்பாணத்திலும் வல்லுவெட்டித்துறையிலும், பருத்தித்துறையிலும் எங்களிடம் பெறற்பாலன.

S. வீரகத்திப்பிள்ளை.

தந்திவிலாசம்,
"Ruby" வல்லுவெட்டித்துறை
(H. 25.)

## புத்தக விளம்பரம்.

(தபாற்செலவு வேறு).

| | ரூ | சத. |
|---|---|---|
| பாரதம் ஆதிபருவவுரை | 3 | 25 |
| டை சபாபருவவுரை | 2 | 25 |
| டை இரண்டும் ஒரே முறையில் | 5 | 00 |
| தொல்காப்பியம் எழுத்ததிகாரம்-நச்சினார்க்கினியம் | 4 | 50 |
| டை சொல், சேனுவரையம் | 4 | 00 |
| அகப்பொருள் விளக்கவுரை (குமாரசுவாமிப்புலவர்பதிப்பு) | 1 | 75 |
| டை சிவானந்தையர் பதிப்பு | 1 | 00 |
| இலக்கியச் சொல்லகராதி | 1 | 75 |
| சித்தியார் சுபக்கம் இருவருரை | 5 | 00 |
| டை மு. திருவிளங்கம் பதிப்பு 4-பகுதிகள் | 2 | 10 |
| திருவுந்தியார், திருக்களிற்றுப் படியாருரை | 0 | 50 |
| தத்துவப்பிரகாசவுரை | 1 | 75 |
| திருக்குறள் சரவணப்பெருமாளையருரை | 3 | 75 |
| இரகுவமிசவுரை (முதற்பாகம்) | 1 | 50 |
| தருக்கசங்கிரகம் | 2 | 00 |
| ஜாதகபாஸ்கரன் | 3 | 50 |
| இராமாயணநாடகம் | 2 | 25 |
| இராமாயணம் பாலகாண்டம் அரும்பதவுரை | 2 | 00 |

விலாசம்:— மானேஜர்,
சோதிடப்பிரகாசயந்திரசாலை,
(Q. 47.) கொக்குவில், யாழ்ப்பாணம்.




## மகாவீரிய தங்க பஸ்பம்.

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

25—8—23ல் சென்னையில் நடந்த தமிழ் வைத்திய கான்பரன்ஸ் அண்டு மருந்து கண்காட்சியில் இவர் மருந்துகள் பஸ்ட்கிளாஸ் (முதல் தர) தேவ ஒளஷதங்களென தங்க மெடலும், சர்டிபிகேட்டும், பெற்றவர்.

☞ வீரிய விர்த்தியில் மன்மதனுக் கோப்பாவர்.

இதை 1, ½ மண்டலம் சாப்பிட சகலவியாதியும் நீங்கி அபார வீரவிர்த்தியும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும். இது எல்லா மருந்துகளுக்கும் மேலானது. ஒரு முறைபரிக்ஷித்தால் உள்ளளாளும் மறவாதது. இது பிரபுக்களுக்கானது. இதன் அபார சக்தி உபயோகித்தவர்களுக்கே விளங்கும். இது வெகு சீக்கிரத்தில் வீரியத்தையும் பலத்தையும் கொடுத்து இழந்த ஆண்மைத்தனம் முழுவதும் திரும்ப உண்டாக்குகிறது. வெள்ளை, வெட்டை, பவுந்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம், கருமேகம், சூலை முதலிய சகல கர்ம வியாதிகளும நீங்கும். பத்தியமில்லை.

1-மண்டலம் 48-நாள் பஸ்பம் ரூபா 20, அரைமண்டலம் 24-நாள் பஸ்பம் ரூபா 10.

## குருநாக பஸ்பம்-மூலத்திற்கு.

ஆப்ரேஷன் அவசியமில்லை. மூளை தானே கரையும். சீழ்மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்த ஒளஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4—0—0.

## குருதாளக பஸ்பம்-இருமலுக்கு.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு; இருமல் கட்டசுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி 8 வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது. புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

### கெர்ப்ப எண்ணை.

இது ஸ்திரீகள் சஞ்சீவி என்னலாம். மாதாந்திர வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகலகெடுதல்களும் நீங்கி கெர்ப்பமுண்டாகும் மிக்க அநுபவமானது. புட்டி ஒன்றுக்கு விலை ரூபா 2.

### மாந்திரீக சத்து

இதை அணிந்துகொண்டால் சகலவசியம், நினைத்தகாரியசித்தி, தனலாபம், புத்திரசந்தானம், தெய்வதுணை உண்டாகும். செய்வினை, பேய், பிசாசு, குழந்தைகளின் பிணி முதலியன நீங்கும். சத்து 1-க்கு ரூபா 2—0—0. 6-சத்து ரூபா 10—0—0.

**ரேசம சங்காரி** ஐந்தே நிமிஷத்தில் ரோமத்தை நீக்கும். எரியாது தோல் கெடாது. புட்டி 1-க்கு அணு 8.

### சர்வபடை நிவாரணி

சகலமேகப்படை, ஊரல், பூச்சிகடி, வண்டுகடி, படர்தாமரை இவைகள்ஒரேநாளில் உதிர்ந்துவிடும் உடனே அரிப்பு நிற்கும் தோல் கெடாது. புட்டி 1-க்கு விலை அணு 8.

### பிரமேக நிவாரணி.

நாட்பட்ட பிரமேகம். தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர்சுருக்கு, எரிச்சல், குத்தல் உடனே நிற்கும் நிச்சயமாய் 3-வேளையில் தீரும் தவறாது. புட்டி ஒன்றுக்கு விலை ரூபா 2.
வி. பி. சார்ஜ் வேறு.

சித்த ஆயுள்வேத டாக்டர்,
சி. மலையப்பசாமிப்பிள்ளை,
(Q. (B) 46) நித்தியானந்த மெடிகல் ஹால், பழனி.

## பித்தளை டம்ளர்கள்.

இந்திய கைத்தொழிலை ஆதரியுங்கள்!

உயர்ந்த பித்தளைத் தகட்டினால் செய்யப்பட்டது. அழகான நகாஸ் வேலைகள் செதுக்கப்பட்டதோடு பார்வைக்குப் பழபழப்பாகவிருக்கும்.

நகாஸ் வேலை செய்யாத சாதா டம்ளர்களும் உண்டு.

நகாஸ் டம்ளர் 3கொண்ட செட் 1க்கு ரூபா 1/12.

சாதா டம்ளர் 3 கொண்ட செட் 1க்கு ரூபா 1/9.



கே. எஸ். முத்தையா & கம்பனி,
"ஸில்க் ஹவுஸ்" காசி.

(Y. 29.)

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

—o—

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவு பிடிக்கும் வண்-கிழக்கு பெ. அசி. மு. அரு. அருணாசலம் செட்டியாரிடம்அடை வுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி டை சட்டத்தின் 12-ம் பிரிவின்படிபிரசித்த ஏலத்தில் விற்கவேண்டிய நகைகளின் விபரம்.

| நம் | மாத. | திக. | ரூபா | ஊர் | பெயர் | நகைவிபரம் |
|---|---|---|---|---|---|---|
| **1922ஆ** | | | | | | |
| 1349 | செப்டெம். | 2 | 30 | பறங்கித்தெரு | மரியாம்பிள்ளை செல்லத்துரை | பொன்சங்கி. 1 |
| 1366 | ,, | 7 | 62 | ஆனைப்பந்தியடி | சதாசிவம் தம்பாபிள்ளை | பொ.சங்கிலிக்கொடி1 |
| 1477 | அக்டோபர் | 5 | 85 | சின்னக்கடைத்தெரு | உகா அபுதல்றகுமான் | பொன் கடயம் சோடி 1 |
| 1622 | நவம்பர் | 23 | 65 | வண்-மேற்கு | சின்னத்தம்பி விசுவலிங்கம் | பொன் முகப்புப் பதக்கமுடன் கம்பிப்பூராணட்டியல் 1 |
| 1661 | டிசம்பர் | 12 | 65 | தாவடி | தம்பிப்பிள்ளை சந்தையா | பொன் பீலிக்காப்பு சோடி 1 |
| 1681 | ,, | 22 | 90 | கன்னாதிட்டி | அப்புக்கண்ணுப்பத்தர் நாகலிங்கப்பத்தர் | பொன் செட்டிக்கொலுசு 1, கல்வைத்தகொலுக். 1 |
| **1923ஆ** | | | | | | |
| 1719 | செனவரி | 8 | 75 | கொக்குவில்-கிழக்கு | இராமநாதர் தம்பையா | பொன் கம்பிப்பூராணட்டியல் 2 |
| 1724 | ,, | 11 | 20 | கந்தர்மடம் | சிதம்பரப்பிள்ளை கார்த்திகேசு | பொன் உருணடை மோதிரம் 6 |
| 89 | பிப்ரவரி | 21 | 20 | ஆனைப்பந்தியடி | ச. நமசிவாயம் | பொன் கல்வைத்தமோதிரம் 1 |
| 130 | மார்ச்சு | 4 | 320 | வண்-மேற்கு | நாகேந்திரஐயர் ராமசாமிஐயர் | பொன் பூக்காப்பு சோடி 1, பீலிக்காப்பு சோடி 1, சங்கிலி அட்டியல் 1, கல்லில்லாத மோதிரம் 1, கைச்சங்கிலி 1 |
| 156 | ,, | 12 | 100 | சோனகதெரு | மீருமெய்யத்தீன் சேகுசுலுத்தானபுதல்காதர் | பொன் பட்டணக்காப்பு சோடி 1, நடுநாயகம் பதக்கத்துடன் கம்பிப்பூரான் அட்டியல் 1 |
| 157 | ,, | 12 | 40 | சோனகதெரு | காதர் உசன் முகம்மது முகய்யதீன் | பொன் கலாவரை மோதிரம் 1, வெள்ளிப்பாதசரம் 2 |
| 158 | ,, | 12 | 150 | சிறும்பியடி | வைத்திலிங்கம் பொன்னுச்சாமி | பொன் தாலிச்சங்.1 |
| 173 | ,, | 16 | 60 | வேலணை-கிழக்கு | ஆறுமுகம் இளையதம்பி | பொன் கொலி. சோ.1 |
| 215 | ,, | 29 | 15 | வண்-கிழக்கு | கார்த்திகேசு இராமு | பொன்தோடு சோடி 1 |
| 233 | ஏப்பிரல் | 3 | 25 | வண்-மேற்கு | வைத்திலிங்கம் சுப்பிரமணியம் | பொன் சங்கிலி 1, மோதிரம் 1 |
| 250 | ,, | 7 | 12 | வண்-கிழக்கு | நாகேந்திரஐயர் ராமசாமிஐயர் | வெள்ளி காற்சங்கிலி சோடி 1 |
| 277 | ,, | 19 | 170 | கொழும்புத்துறை | சிவசிதம்பரம்பிள்ளை செல்லப்பாபிள்ளை | பொன் பாவற்கொட்டைமாலை 1, அச்சரக்கூடு கோர்த்த குண்டுச்சங்கிலி 1 |
| 280 | ,, | 22 | 25 | சோனகதெரு | சுலையுமான் நாகை காயற் முகம்மது அப்துல்காதர் | வெள்ளிப்பாதசரம் 2, தண்டை 2 |
| 289 | ,, | 25 | 25 | வண்-கிழக்கு | கார்த்திகேசு துரையப்பா | பொன் முகப்பில்லாத குண்டுச் சங்கிலி 1 |
| 293 | ,, | 26 | 60 | கந்தர்மடம் | விசுவலிங்கம் சுந்தரம்பிள்ளை | பொன் பட்டணங் காப்பு சோடி 1 |
| 316 | மே | 5 | 100 | பெருமாள்கோவிலடி | நாகப்பசெட்டி பெருமாள் | பொன் பட்டணங்காப்பு 2, சங்கிலி அட்டியல் 1 |
| 318 | ,, | 5 | 35 | கன்னாதிட்டி | மாணிக்கம்பிள்ளை சுப்பிரம்பிள்ளை | பொன் கம்பிப்பூரான் அட்டியல் 1 |
| 320 | ,, | 6 | 11 | வண்-கிழக்கு | அருணாசலஞ்செட்டி தியாகராசா | பொன்வெள்ளைக் கல் கடுக்கன்சோடி 1 |
| 332 | ,, | 7 | 70 | ஓட்டுமடம் | செல்லையாப் பங்காரு அம்மாள் | பொன் சயினுப் பவுண் 1, சங்கிலி 1, வெள்ளிப்பாதசரம் சோடி 1 |
| 351 | ,, | 10 | 50 | செட்டித்தெரு | அருணாசலஞ்செட்டி தியாகராசா | பொன் சிகப்புக்கல் தோடு 2, வெள்ளைக்கல்தோடு 2 |
| 363 | ,, | 16 | 60 | நீர்வேலி | வயிரவநாதர் ஆறுமுகம் | பொன் பீலிக்காப்பு சோடி 1 |
| 368 | ,, | 17 | 25 | செட்டித்தெரு | அருணாசலம்செட்டி தியாகராசா | பொன் பதக். 1 |

விற்பனவு:—ரத்தாக்ஷி ஆ வைகாசி மீ 25-ந்திகதிக்குச்சரியான 1924ஆ ஜூன் மீ 7உ சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் டை கடையில் எடுபட்ட நகை பிறகீலகளாக பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வெந்தில்மேல்தர்,
அரு. செல்லையாஉடையார்,

(Mis 485.)

## ரூபா கரு இனும்.

சென்ற பத்துநாளாக என்னுடைய மகன் காணாமற்போயினன். இவனின்பெயர் சபாபதி; சறறேசித்தப்பிரமையுடையவன்; வயசு 17; சிவலை நிறங்கொண்ட மெல்லிய சரீரமுடையவன்; பின்குமேியுடையவன் இவனைக் கண்டோர் இருக்கும் இடத்தை அறிவித்தாலும் அல்லது நேரே என்னிடம்ஒப்பித்தாலும் ரூபா 15 இனும். கோடுப்பேன்.

இங்ஙனம்,
ச. விநாயகமூர்த்திச் செட்டியார்,
மருந்துச்சரக்குக்கடை,
யாழ்ப்பாணம்.
4-6-24.
(Mis. 493.)



# இந்துசாதனம்

யாழ்ப்பாணம்:— இரத்தாக்ஷி௵ வைகாசி மீ 23உ வியாழக்கிழமை.


## விடிந்தும் தமோற்றமா?

சென்ற 1914-ம் ஆண்டு பாரிய யுத்தம் ஆரம்பித்தபின் வரிற பஞ்சமுண்டாக, பனியால் விழுந்தவனை மாடேறி மிதித்தவாறு நமது அரசினரும் தபால்முத்திரை, போஸ்கார்ட், "பார்சற்" செலவு, புகைரதப் பிரயாணச் செலவு, புகைவண்டிகளிற் பொருட்களை யேற்றி யனுப்புதற்கான கூலி முதலியன எல்லாவற்றையும் உயர்த்தினர். இரண்டு சதம் விலையான போஸ்கார்ட்டிற்கு 3 சதம் வாங்கிவரலாயினர். 5 சத முத்திரையை 6 சதமாகவும் 2 சத முத்திரையை 3 சதமாகவும் உயர்த்தினர். தந்திச் செலவைக் கூட்டினர். புகைரதத்தில் ஒன்றரைச்செலவில் குறித்த காலத்துட் போய் மீண்டு வருதலை நீக்கினர். அக்காலத்தில் உணவுப் பொருட்களும் உடுக்குந் துணியும் இருமடங்கு மும்மடங்கு விலை யதிகமாக, சீவனத்திற்கு இன்றியமையாத மற்றும் உபகரணங்களும் விலையேற, அரசினரும் தயவு தாட்சணியமின்றி முத்திரை புகைரதப் பிரயாணக்கிரயம் என்னுமிவற்றை உயர்த்திவிட, சனங்கள் பட்டபாட்டை இப்பொழுது நினைத்தாலும் மனம் ஒருதரந் திடுக்குறும். ஆனாலும் சனங்களுக்கு ஒரு மன ஆறுதல் மாத்திரம் இருந்தது. அது என்னவென்றால், யுத்தம் முடிந்து சமாதானம் உண்டானபின் தாங்கள் தொன்மைபோல் வாழலாமென்பதே.

யுத்தமும் முடிந்துவிட்டது. முடிந்தும் ஏறக்குறைய ஆறு வருடங்களாயின. உணவு உடைக்காகிய பொருட்களும் மற்றும் உபகரணங்களும் பழைய நிலையை அடையாவிட்டாலும் ஒருவாறு மலியலாயின. ஆனால் நமது அரசினர்மாத்திரம் யுத்தம் முடிந்து இத்துணை வருடங்கள் சென்றும் தாங்கள் உயர்த்திய பொருள்களின் விலையையும் வரிகளையும் குறைத்தற்கு எள்ளளவேனும் நினைக்கவில்லை. குறைக்க நினையாதொழிந்தமையோடு அமையாது தங்கள் உத்தியோகத்தர்களின் வேதனத்தையும் உயர்த்திவிட்டனர். சில வரிகளையுங் கூட்டிவிட்டனர். இலங்கை அரசிறை வருவாயிலும் மேலதிகமான பணம் எஞ்சலாயிற்று. சென்ற வருடம் எஞ்சிய மேலதிக வருவாய் கரும்பிலிருந்து சாறு பிழிந்தெடுத்தவாறு ஊரவர்களிடமிருந்து வலிதில் அறவிடப்பட்ட வரிப்பணத்தின் எச்சமல்லவா? இங்கிலாந்திலும் இந்த முறைதான் அனுசரிக்கப்படுகிறதா? ஊரவர்களாகிய எங்களிடத்திற் குடிகொண்டிருக்கும் தாரித்திரியம் உண்மையாக அரசினர் உணராததா? நமது அரசினர் "விடிந்துவிட்டது நன்றாய் விளக்கை ஏற்றடி வள்ளி" என்றவன் சீலமாகநிற்பதை அவர்களுக்கு எடுத்துச் சொல்லியழுவதற்கு முன்வருபவரைக் காணேமே. ஆறில்லாத யாழ்ப்பாணத்திற்கு மகாவலிகங்கையை வரும்படி மடைமாறிக்கட்டல்வேண்டும்; மலையில்லாத வடமாகாணத்திற்கு மத்திய மாகாணத்திலிருந்து ஒரு பெரிய மலையையெடுத்துக்கொண்டுவந்து வைத்தல்வேண்டும்; என்று யோசித்துநிற்கும் நமது பிரதிநிதிகள், அரசினர் யுத்தம் முடிந்து இத்துணைக் காலஞ்சென்றும் வேண்டுமென்று குறைத்தற்கு மறந்திருக்கும் வரிகளையும் பிறவற்றையும் வேண்டாமென்று நீக்குதற்கு முயற்சிசெய்யவொண்ணாதா?

## எம்மதத்தையுங் கைக்கொள்ளலாமா?

(வண்ணை நகர் ஸ்ரீ க. வைத்தியலிங்கபிள்ளை எழுதியது.)

தற்காலம் இங்கிலீசுக் கல்வியில் மாத்திரம் பாண்டித்தியம் படைத்த நூதன விவேகிகளிற் சிலர், ஒருவன் எந்தச் சமயத்தையுங் கைக்கொள்ளலாம், சர்வமதங்களினும் கடவுளுடைய திருவருள் பிரதிபலித்துக்கொண்டிருக்கின்றது; ஆனதால் எம்மதத்தை அனுஷ்டித்தாலும் மோக்ஷம் லபிக்குமென்பது திண்ணமென்று கூறுகின்றார்கள். இவர்களுடைய கூற்று எம்மட்டு உண்மையென்பதைச் சற்றே லோசிப்பாம்:— எல்லா மார்க்கங்களும் ஒரே தன்மையான வழிபாட்டையும் ஒழுக்கத்தையும், ஞானத்தையுங் கூறுகின்றனவோவெனின், இல்லை! இல்லை! ஒவ்வொரு மதமும் போதனாபேதத்தால், வேறு மாறுவகைகளாயிருக்கின்றன. அது எங்ஙனமெனின், ஒருசாரார் சரீரத்தைத் தவிர "ஆன்மா" என்பதொரு பொருளில்லை; வெற்றிலை பாக்குச் சுண்ணாம்பு முதலிய பொருள்களின் சேர்க்கையால், சிவப்பாகிய ஒரு நிறந் தோற்றுவதுபோல, பஞ்சபூதங்களின் கலப்பால் "ஆத்மா" என்று ஒரு பொருள் தோற்றுகிறதன்றி, ஊன்றிநோக்கினால் அங்ஙனம் ஒரு பொருளில்லை; இந்தத் தேகம் அழிந்தவுடன் பிருதிவி பிருதிவியோடு சேருகின்றது; அப்பு அப்புவோடு சேருகின்றது; தேயு தேயுவோடு சேருகின்றது; வாயு வாயுவோடு சேருகின்றது; ஆகாயம் ஆகாயத்தோடு சேருகின்றது. வேறு மிச்சமொன்றுமில்லை. "இவைகளை இயக்கக் கடவுள் என்று ஒரு தலைவன் வேண்டியதுமில்லை" என்கின்றார்கள். மற்றொருசாரார் ஆன்மா என்று ஒரு பொருளில்லை; "பல தண்ணீர்க் குடங்களிலே ஒரு சந்திரன் பலவாய்த் தோற்றப்படுதல்போல" அந்தப் பிரமமே ஒவ்வொரு சரீரங்கள்தோறும் நின்று தாண்டவமாடுகின்றது. மறுமையில் மோக்ஷ நரக முண்டென்பது முயற்கொம்பாகும். பிரமமானது சர்வவியாபியாய் உலகம் முழுவதும் நிறைந்திருக்கும்போது, ஆன்மா என்று வேறு ஒரு பொருள் எங்கே யிருக்கின்றது; "மகாகாயம் குடாகாயமாயிருந்து குடமுடைந்தவுடன் மகாகாயத்தோடு சேருவதுபோல" தேகங்கள் தோறும் நின்று நடிக்கின்ற பிரமம், தேகம் அழிந்தவுடன் பழைய பிரமமாய்ப் போகின்றது என்று சொல்லுகின்றார்கள். வேறு சிலர் கடவுளுண்டு, ஆன்மா உண்டு, பாசம் உண்டு, மோக்ஷ நரகமுண்டு, மறுபிறப்புண்டு, விதியுண்டு, பந்த மோக்ஷமுண்டு என்று கூறுகின்றார்கள். வேறு சிலர் கடவுளுண்டு, ஆத்மா உண்டு, ஜென்மபாவம் கன்மபாவம் உண்டு, மறுபிறப்பில்லை, விதியில்லை, உத்தரிப்புத்தலம் உண்டு, நித்திய மோக்ஷம் நித்திய நரகமுண்டு என்று சாதிக்கிறார்கள். வேறு சிலர் மேற்கூறிய மதத்தவருடைய கொள்கைகள் எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டு உத்தரிப்புத் தலம் மாத்திரம் இல்லையென்று மறுக்கிறார்கள். சிலர் பிரமா விஷ்ணு உருத்திரன் முதலிய ஒவ்வொருவரையே பரம்பொருளென வழிபட்டு வருகின்றார்கள். சிலர் கர்மத்தை மறுக்கிறார்கள். சிலர் மாயையை மறுக்கிறார்கள். சிலர் ஆணவமலம் என்பதொன்றில்லை என்று வாதாடுகின்றார்கள். சிலர் புண்ணியத்தைப் பாவமாகவும், பாவத்தைப் புண்ணியமாகவும் பேசுகின்றார்கள். சிலர் விதியை யொப்புக்கொண்டு மறுபிறப்பை நிராகரிக்கிறார்கள். இங்ஙனமே ஒவ்வொரு சமயமும் எல்லாவகையாலும் பேதப்பட்டு நித்திய போராட்டமாயிருக்க, எந்தச் சமயமாய் இருந்தாலும் என்ன? அதனாலொரு தோஷமுமில்லை; எதைக் கைக்கொண்டு வழிபட்டாலும் மோக்ஷமடைவது சாதமென்று மனம் போனவாறு பேசும் நூதன விவேகிகளின் குறுகிய மதியைக் குறித்து வருந்துகின்றேம். இவர்கள் கூறும் மாற்றத்தை நோக்கும்போது, "ஊரிலுள்ள வனப்புமிக்க ஆடவரெல்லாம் என்னுடைய நாயகர்தான்" என்று இயம்புகின்ற வனிதையின் வார்த்தையை யொத்திருக்கின்றதே! இவர்கள் எல்லா மதத்தினருக்கும் நல்லவராயிருந்து காலத்தை விடவேண்டும் என்னுந் தந்திரோபாயத்தால் "மலங்கு மீன்போல" இங்ஙனம் நடித்துத் திரிகின்றார்கள். இத்தகையோர் ஒரு மதத்திலும் பற்றின்றி, "இரண்டு தோணியிற் கால் வைத்தவனைப்போலவும்," "இரண்டாட்டி யூட்டிய குட்டியைப்போலவும்" ஓராதாரவுமின்றி அதோகதியடைவாரென்பது ஒருதலை. "கல்லென்றாலுங் கணவன் புல்லென்றாலும் புருஷன்" என்றவாறு தான் வாழ்க்கைப்பட்ட நாயகன் பலரும் மதிக்காத ஒருவனாயிருந்தாலும், அவனையே தெய்வமாக வழிபட்டு, பரபுருஷனைக் கனவிலுஞ் சிந்தியாத அரிவை, இம்மையிலே இவள் கற்புக் கருந்ததியோ, சந்திரவதியோ, தமயந்தியோ, சாவித்திரியோ என்று பலராலுந் துதிக்கப்பெற்று, மறுமையிலும் உமையம்மையாரது பாதசரோருகங்களையடைவள். அங்ஙனங் குறிக்கப்பட்ட ஒரு நாயகனுக்கு வாழ்க்கைப்படாமல், எதிர்ப்பட்ட ஆடவரோடெல்லாம் கைகலந்து வேற்றுமை யின்றிக் கொண்டாடுவாளாயின், இம்மையிலே அவசாரியென்று பலராலும் இகழப்படுவதன்றி, மறுமையிலும் ஆதவன் அம்புலியுள்ளவரை ரௌரவாதி நிரயங்களிலே கிடந்து வருந்துவள். இவ்வுவமையை நூதன விவேகிகள் உய்த்துணர்வாராக. ஒவ்வொரு சமயமும் பயனளிக்குந் தன்மையில் மாறுபட்டேயிருக்கின்றன. அங்ஙனம் பயன் பலவிதப்படும்பொழுது, எல்லாப் பிரயோசனத்தையும் ஒன்றென்றாவது, ஒரே தன்மையுடையனவென்றாவது சொல்ல முடியுமா? முடியாது. ஒன்று மாத்திரம் மெய்ப்பயன் அளிக்கக்கூடியதாயிருக்க, மற்றவை அதற்கு மாறாகவேயிருத்தல்வேண்டும். எஞ்ஞான்றும் உண்மை நிலை ஒன்றாகவேயிருக்கும். அங்ஙனம் உண்மைநிலை ஒன்றாயின், அதனால் பிரதிபாதிக்கப்படும் மோக்ஷ நிலையும் ஒப்புயர்வற்றதாகவே விளங்கும்.

சில சமயங்கள் பாவத்தையே புண்ணியமாக விதிக்கின்றன. ஒருவன் அச்சமய போதனையைக் கைக்கொண் டொழுகுவானாயின் அவனுக்குப் பிராப்தமாவது நிரயமன்றோ? எந்நாளும் அறிவாளிகள் பந்தத்துக்கு ஏதுவான நெறியை நிராகரித்து, மோக்ஷத்துக்கேதுவான உத்தம சமயத்தையே கைக்கொள்ளுதல்வேண்டும். பதி பசு பாச இலக்கணம், பந்தமோக்ஷங்களின் தன்மை ஆகிய இவைகளை இத்தன்மைத்தென வெள்ளிடைவிலங்கலையொக்க உள்ளபடி எடுத்து ஐயந்திரிபற விளக்கி நன்னெறியில் நிறுத்துஞ் சமயமெதுவோ அதனையே அநுஷ்டித்தல் அறிவாளிகள் யாவருக்கும் இன்றியமையாத கடனும். அதனை விடுத்து எந்தச் சமயத்தையுங் கைக்கொள்ளலாம், எல்லா மதமும் ஒன்றுதான் என்று வரம்பு கடந்து, மேதாவியரது ஆஞ்ஞைக்கும் அஞ்சாது, மனம் போனவாறு பிதற்றித் திரிதல் நமது நண்பராகிய நூதன விவேகிகட்கு அறிவுடைமையாகாது! ஆகாது!!

## உலகம் பலவிதம்.

முத்து என்பவனுக்கு வயது இருபத்திரண்டு வரையிலிருக்கும். அவன் குலங்குடியிற் பிறந்தவன்; சிறுபராயத்திலேயே தன் அன்னை தந்தையரைப் பறிகொடுத்து விட்டமையினாலே, முத்துவுக்குப் படிப்பும் குறைவாகவிருந்தது. இருந்தாலும் தமிழ்ப்பாஷையை நன்குஎழுதவாசிக்க அறிவான். அவன் சீவனத்தின்பொருட்டுப் பலமுயற்சிகளைச் செய்தானாயினும பொல்லா விதிவசத்தினாற்போலும் அவனுக்கு ஒரு முயற்சியுங் கைகூடவில்லை. தரித்திரம் அவனிடத்திலேயே தரித்திருந்தது. சிற்சில சமையங்களில் முத்து உண்ண உணவுக்கும் உடுக்கத் துணிக்கும் பெரிதும் முட்டுப் பட்டிருப்பான். அவன் தன் விதியை நினைந்து நினைந்து தனக்குள் வருந்துவதன்றி ஒருபோதும் தன் இலம்பாட்டைப் பிறரிடஞ் சொல்ல மாட்டான். முத்துவின் இனத்தவர்களும் அவனுக்கு ஏதும் உதவி செய்வதில்லை. "உண்டானபோது கோடானுகோடி யுறமுறைபார், தொண்டாகவந்து தொழும்பு செய்வார் செல்வந் துஞ்சிவிட்டால், கண்டாலும் பேசார் அழைத்தாலும் வாரார் கவ்வைகவ்வை (இச்) சண்டாளரோடுறவாகாது ரத்தின சபாபதியே" என்றவாறு முத்துவின் இனசனம் அவனைக் கண்டாலும் ஏனென்றுங் கேளார், அவன் அழைத்தாலும் பேசார்கள், அவன் தங்கள் இனத்தவனென்றுசொல்ல இலச்சைப்படுவார்கள். அவன் இப்படி ஆருமற்றவனாய் அலைந்து திரியும்போது தலைவரிப்பணம் இறுக்கவேண்டிய தவணை வந்துவிட, தான் ஊரில் இருந்தாற் சங்கடமாகுமென நினைத்து, தன் சொந்த ஊராகிய புலோலியை விடுத்து ஒரு தோணியி லேறிக்கொண்டு போய்த் திருக்கோணமலையை யடைந்தான்.

* * *

திருக்கோணமலையிற் கடைவைத்திருப்போருட் புலோலி பருத்தித்துறையான இடங்களைச் சேர்ந்தவர்கள் பலருளர். முத்து துறைமுகத்திலிருந்து நேரே கடைத்தெருவிற்குச் சென்று புலோலியாருடைய கடையொன்றிற் போய்ச்சேர்ந்து தன்னுடைய வரலாற்றை அக்கடை முதலாளிக்குச்சொல்லி, தனக்கு ஏதும் பிழைப்புக் காட்டக்கூடுமோ வென்று கேட்டான். முதலாளி மிகவுஞ் சந்தோஷப்பட்டு "நீ இங்கேதானே ஒரு கணக்கப்பிள்ளையாக இருந்துகொள்" என்று சொல்ல, முத்துவும் அதிபயபத்தியோடு அக்கடையிலிருந்து தன்கடமையைச் செய்து வந்தான். முதலாளிக்கும் முத்துவிடத்தில் அதிக விசுவாசம் உண்டானது. முத்துவுக்கு முதலாளிபொறுப்பிலேயே சாப்பாடுஞ் சம்பளமுமாதலால், அவன் தன் சம்பளத்தை முதலாளியிடம் வாங்காது சேரவிட்டுவந்தான். முத்துவினுடைய நேர்மையையும் ஒழுக்கத்தையும் கண்டு அவனிடத்தே அதிக பிரியம் பாராட்டி வந்த முதலாளி அவனுடைய சம்பளத்தை முதலாகக் கொண்டு சரக்குவாங்கித் தன்கடையிற்றானே வேறாகவும் வியாபாரஞ் செய்யும்படி அனுமதி கொடுத்தான். முத்து முதலாளியின் கருமத்தையும் தன் கருமத்தையும் அதிக நிதானத்தோடு நடத்திவந்தான். முதலாளி சில சமையங்களில் கடைப் பொறுப்பு முழுவதையும் முத்துவிடம் ஒப்பித்துவிட்டுத் தான் ஊருக்குப் போய் அங்கு நின்று பெட்டி பாய் பனங்கட்டி முதலிய சரக்குக் கள் வாங்கிக் கடைக்கு அனுப்பி வைப்பதுமுண்டு. சிலகாலஞ் செல்ல முதலாளி முத்துவினுடைய முதலையுந் தன் முதலையுஞ்சேர்த்து இருவர்க்கும் பங்காய்க் கடையை நடத்திவந்தான். முதலாளி பருத்தித்துறையிலிருந்து சரக்கு ஏற்றி அனுப்பும்போது சிப்பங்களில் "முத்து" என்று விலாசமிடுவதை முத்துவின் இனசனத்தவர் விசாரணை செய்து தாங்கள் முந்தி அலட்சியஞ் செய்த அந்த முத்துவே இந்த முத்து என்று அறிந்துகொண்டார்கள். அவர்களுட் சிலர் முத்து அடைந்திருக்கும் உந்நத பதவியைக் கேள்விப்பட்டுப் பொறாமை கொண்டார்கள். வறியவர்களாயுள்ள சிலர் முத்துவின் க்ஷேமாதிசயங்களை விசாரித்து அவனுக்குக் கடிதமெழுதத் தலைப்பட்டார்கள். முந்தி இனஞ் சனமில்லாத முத்துவுக்கு இப்பொழுது தமையன் தம்பி முறையானவரென்றும் மாமன் மைத்துனன்முறையானவர்களென்றும் சிறியதாய் பெரியதாய் தமக்கை மைத்துனி பேர்த்தி முறையானவர்களென்றும் பலவகையாக உரிமை பாராட்டி, "முத்துத்தம்பி" என்று அவன் பெயரையுஞ் சிறிது நீட்டிப் பெரிதும் அன்பு காட்டி, தங்கள் மானத்தை யோட்டி அநேக கடிதங்கள் எழுதத் தலைப்பட்டார்கள். முத்து தனக்குக் கடிதமெழுதும் இந்தப் புதிய இனசனத்தவருட் பலரை உண்மையாக யாரென அறியானாயினும் அவர்களெல்லாருக்கும் காலதாமசமின்றிப் பதில் எழுதிவிடுவான். அவர்கள் விரும்பியபடி பணமேனும் வஸ்திரம் முதலிய பொருளேனும் அவர்களுக்குத் தவறாது அனுப்பி வைப்பான். தன் கையெழுத்தை மாத்திரம் வழக்கம்போல "முத்தன்" என்றே பதிற்கடிதங்களில் இட்டுக்கொள்வான். இப்படி அவன் செய்துவந்தமையினாலும் முதலாளி அவனுடைய குணாதிசயங்களை ஊரில் வந்து நிற்கும்போது பலருக்குஞ் சொல்வதினாலும், திருக்கோணமலையிலுள்ள மற்றும் வியாபாரிமார் ஊருக்கு வருஞ் சமையங்களில் அவனைப் புகழ்ந்து பேசினமையினாலும் புலோலியிலே முத்துவைப்பற்றிப் பெரும் பிரஸ்தாபம் ஏற்படலாயிற்று. சிலர் முத்துவைக்கண்டு வெகுநாளானபடியாற் காண அபேட்சையாயிருக்கின்றதெனவும் ஒருமுறை ஊருக்கு வந்து போவது நல்லதெனவும் அவனுக்குக் கடிதமெழுதலாயினர். ஊரிலே முத்துவிற்கு மாமன் மாமி முறை பாராட்டிக் கடிதமெழுதுவோர் மிகப் பலராயினர். யார் எப்படி யெழுதினாலும் முத்து அக்கடிதங்கட்குத் தக்க சாந்தமான விடையெழுதுவதன்றி எவர் உள்ளத்தையாயினும் வருத்தக்கூடியபதில் எழுதுவதில்லை.

* * *

முதலாளியின் மனைவிக்கும் ஏகபுத்திரியாகிய அன்னலட்சுமிக்கும் முத்துவிடத்தில் அதிக பிரியமுண்டு. அவன் கடையை நன்கு நடத்திவருகின்றமையினாலேயே தன்னாயகன் தங்களுடன் ஊரிலே அதிக நாட்கள் தங்கிநிற்கத்தக்கதாயிருக்கின்றானென்பதையிட்டே முதலாளியின் மனைவிக்கு அவனிடத்தில் அதிக பிரியமுண்டானது. மகளுக்கும் அப்படியேயாம். ஆனாலும் முதலாளியின்மனைவி முத்துவின் குலங் கோத்திரங்களைப்பற்றித் தன்னாயகனிடத்தில் இடையிடையே விசாரிப்பது வழக்கம். அப்பொழுது தகப்பன் சொல்வதை மகள் மறைந்துநின்று கேட்பதும் வழக்கம். புதிய சுற்றத்தார் சிலர் முத்துவின் சாதகத்தை அனுப்பிவைக்கும்படியும் அவனுக்குத் தனித்தனி காகிதம் எழுதினார்கள். ஆனால் இந்தச் சமையத்தில் முத்துவின் நாமத்தை முன்னும் பின்னும் நீட்டி "ஸ்ரீமத். முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள்" என்று விலாசமிட் டெழுதினார்கள். உலகத்தின் இயல்பு இருந்தவாறென்னை? முத்தன்என்னும்பேர் முத்துவாய் முத்துத்தம்பியாய் முத்துத்தம்பிப்பிள்ளையாய் சுற்றில் ஸ்ரீமத் முத்துத்தம்பிப்பிள்ளையவர்களாய் இருபக்கத்தாலும் நீண்டுவிட்டது. இதற்கெல்லாங் காரணம் என்னவென்பது எல்லாரும் அறிந்த இரகசியம். (வரும்).

## சமாசாரம்.

**நல்லூர் சந்திரசேகரப்பிள்ளையார் கோயில் உற்சவம்:**—இவ்வாலயத்தில் இந்த வைகாசி மீ 25உ சனிக்கிழமை அவசாரோகண உற்சவம் ஆரம்பமாகி ஆனி மீ 3உ திங்கட்கிழமை இரதோற்சவமும் தீர்த்தோற்சவமும் சிறப்புற நடைபெறும்.

**கோத்துவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்:**—இக்கோவிலில் இந்த வைகாசி மீ 26உ ஞாயிற்றுக்கிழமை அவஜாரோகண உற்சவம் ஆரம்பமாகி அடுத்த ஆனி மீ 3உ திங்கட்கிழமை இரதோற்சவமும் அடுத்த நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

**ஐயனார் கோவிலடி விசுவேசப்பிள்ளையார் கோவில்:**—வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடியிலுள்ள விசுவேசப்பிள்ளையார் கோவிலில் நெடுங்காலமாக அலங்காரோற்சவமே வருடந்தோறும் நடைபெற்றுவந்தது. ஆனால் அங்குள்ள புண்ணியசீலர்களின் முயற்சியினாலும் திரவிய சகாயத்தினாலும் வருகிற ஞாயிற்றுக்கிழமை அவஜாரோகணமாகி மகோற்சவம் விதிப்படி சிறப்புற நடைபெறுமென வறிந்து மகிழ்ச்சியடையலானேம். இவ்வாலயத்தில் ஆனி மீ 3உ ரதோற்சவமும் அடுத்தநாளாகிய பூரணையன்று தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

**புன்குடுதீவுக் கணேச வித்தியாசாலை:**—இவ்வித்தியாசாலைப் புதுக்கட்டிடப் பிரவேசம் இந்த வைகாசி மீ 25உ சனிக்கிழமை காலை ஆறுமணி வரையில் நடைபெறும். அன்றிரவும் அதற்கடுத்த இருதினங்களிலும் விசேஷ உபந்நியாசங்கள் செய்யப்படும்.

**பொலிஸ்உபபரிசோதகரின்வீட்டிற்களவு:**—சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு இங்குள்ள பொலிஸ் உபபரிசோதகரின் வீட்டிலிருந்த ஒரு வெள்ளிக் கோப்பையையும் ஒரு மூக்குக் கண்ணாடியையும் திருடிய ஒருவர் குற்றவாளியாகக்காணப்பட்டு மூன்றுமாதக் கடுங்காவல் மறியல் தீர்ப்பு விதிக்கப்பெற்றார்.

**வைக்கோல் ஏற்றிவந்த வத்தை கடலில் முழ்கியது:**—சென்ற சனிக்கிழமை திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறைக்கு வைக்கோலும் செல்லும் ஏற்றிக்கொண்டு புறப்பட்ட வத்தை பொலிகண்டிக் கணித்தாக வரும்போது, வைக்கோற் பாரத்திற் காற்றுப் பிடித்தமையினால் கவிழ்ந்து கடலில் மூழ்கிவிட்டது. அதிலிருந்த பிரயாணிகள் மூவர்; வத்தைக்காரர் நால்வர். அந்த மூவருள் ஒருவன் பணப்பையைக் கழுத்திற் கட்டிக்கொண்டமையினால் மிதந்துகொள்ள முடியாமற் கடலுள் மூழ்கக் காசோடு உயிர்விட்டான். மற்றவர்கள் கட்டுமரக்காரரால் மீட்கப்பட்டார்கள்.

**பலநாட்கள்வன் ஒருநாள் அகப்பட்டான்:**—கள்ளத்தராசுபடிகள் வைத்துச் சனங்களை ஏமாற்றிய ஒருவியாபாரி கொழும்புப் பொலிஸ் கோட்டிலே குற்றஞ் சாட்டப்பட்டு 30 ரூபா அபராதம் விதிக்கப்பெற்றான்.

**7000 ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டன:**—சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு கொழும்பிலே சதாம் ஸ்றீற்றிலுள்ள ஒரு மக்மதியருடைய நகைக்கடையில் 7000 ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டன.

**தந்திக்கம்பி பழுதடைந்தமை:**—இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே இடப்பட்ட தந்திக்கம்பி பழுதுபட்டிருந்தமையினால் தந்திப் போக்குவரத்துக்கள் சென்ற சிலநாட்களாகத் தடைப்பட்டன. இப்பொழுது திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது.

**6 வருடத்துக்குமுன் நடந்த களவைப்பற்றிய விசாரணை:**—கொழும்புத் துறைமுக வேலைப் பகுதியிலுள்ள மிஸ்டர் அண்டர்டோன் என்பவருடைய வேலைக்காரனாயிருந்த ஜோன் என்பவன் 1918ஆம் வைகாசி மீ 2உ தன் எசமானிடம் 250ரூபாவைத் திருடிக்கொண்டு மறைந்த வழக்கைப்பற்றி மேற்படி எசமான் இந்த ஜூன் மீ 2உ கொழும்புப்பொலிஸ்கோட்டில் விசாரணை செய்யப்பட்டார். எதிரி இன்னும் பிடிபடவில்லை.

**சேர். பொ. அருணாசலமவர்களின் பிரதிமைப் படம்:**—இந்த ஜூன்மாதம் 2-ந் தேதி திங்கட்கிழமை இரவு கொழும்பிலே நடைபெற்ற சனசமூக ஊழியச் சங்கப் பரிசளிப்புக் கூட்டத்திற்கு எமது தேசாதிபதியவர்களும் பாரியாரும் தலைவராயிருந்து கூட்டத்தை நடத்தினர். லேடி மனிங் அவர்களால் பரிசுகள் கொடுக்கப்பட்டன. எமது சிறந்த சனத்தலைவராயிருந்து காலம் சென்ற ஸ்ரீமான் பொ. அருணாசலமவர்களுடைய ஞாபக சின்னமாக அமைக்கப்பட்டுள்ள பிரதிமைப்படம் தேசாதிபதியவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

---

## எல்லாரும் வாருங்கள்.

மோட்டோர்ரதங்களால் விளையும் சீவமோசங்களையும் ஆபத்துக்களையும் பற்றி யோசித்து அவற்றை நீக்கும்படி அரசினருக்கு விண்ணப்பஞ்செய்யும் நோக்கமாக, வருகிற சனிக்கிழமை (7-6-24) பின்னேரம் 4 மணி வரையில் முற்றவெளியிற் கூடவிருக்கும்மகாசனக் கூட்டத்திற்குத் தவறாமல் எல்லாரும் வாருங்கள்.

## கடிதம்.

### வெள்ளவத்தை திருக்குறட் பயிற்சிக் கழகம்.

மேலைத்தேசப் போலி நாகரிகத்திற்கும் கீழைத்தேசத்திற் றலைமையுடைய இடமெனப் பலராலும் பலமுறையுங் கூறப்பட்ட கொழும்பு மாநகரத்தின்கண்ணே, எல்லாம்வல்ல இறைவனருளால் இடையிடையே அழிவற்ற சைவசமயக் கொள்கைகளை வழுவாது அநுசரிப்பவர்களும், தமிழ்மொழியை இகழாது போற்றி வருபவர்களுஞ் சிலர் காணப்படாமலில்லை. இருட்டிலே விளக்கொளி மிகவும் பிரகாசங் கொடுப்பதுபோலவும், ஆதில்லாவூரிலே சிறு குளங்க ளிருந்து மகிமை யடைவது போலவும், தமிழ்மொழியாளர் பெருமை குன்றிய இக்காலத்து அதிகாலையிலுதிக்கும் ஞாயிறுக்கு முன் தோன்றும் விடிவெள்ளிபோன்று அங்கு மிங்கும் சிற்சில தமிழ்ச்சங்கங்கள் மிளிருகின்றன. இவைபோன்ற ஓர் சங்கம், தமிழர் பலரும் விரும்பி வசிப்பதும், கொழும்பிற் சிறந்த பாகமாகியதும், குடதிசையிற் பெரிய சமுத்திரத்தாலும் மற்றைப்புறங்களில் வெட்டுவாய்க்காலினாலுஞ் சூழப்பட்டதாயும், குயில்கள்சுற்றிதம் பாடும் சோலைகளை யுடையதாயுமுள்ள வெள்ளவத்தையிலே பெரிய தெருவில் உள்ள காந்தி யாச்சிரமமென்னும் வீட்டிலே பதிவுகர்த்தர் (Registrar - General's) கந்தோரில் வேலையாயிருக்கும் திரு. இ. தம்பிராசா அவர்களைத் தலைவராகக் கொண்டு இப்போது பன்னிரு மாணவரை யுடைத்தாய் 'திருக்குறட் பயிற்சிக் கழகம்' என்னும் பெயருடன் நடைபெற்றுவருகின்றது. இக்கழகத்திற் சேர்ந்திருக்கிறவர்கள் தமிழிலும் சைவசமயத்திலும் மிக்க அபிமானமுடையவர்களென்றும், இவர்களால் நம்மொழியுஞ் சமயமுந் தழைத்தோங்குமென்று மதியக்கிடக்கின்றது. இப்போ ஒரு வாரத்தி லிருமுறை அதாவது ஞாயிற்றுக்கிழமை காலையும் புதன்கிழமை மாலையுமாய் பொய்யில் புலவர் திருவள்ளுவ நாயனார் அருளிச்செய்த தமிழ்வேதமெனப் புகழ்ந்துரைக்கப்படும் திருக்குறளை வெகு சாக்கிரதையோடு ஒழுங்காய்க் கற்றுவருகின்றனர். பரிமேலழகருரையையே பெரும்பான்மையுந் தழுவி மற்றைய வுரைகளையு மிடையிடையே கொண்டு தமது அநுபவங்களோடுமொட்டி கழகத்தலைவர் மிகவும்மெச்சத்தக்கவிதமாய்க் கற்பிக்கின்றனர். திருக்குறள் கற்றபின் சைவசித்தாந்த சாஸ்திரங்களை முறையாய் ஒரு கலைவல்லோரை யழைத்துக் கற்றுக்கொள்வதென்பது கழகத்தா ரெண்ணம். ஆங்காங்கு தமிழ்நாடுகளிலே சிதைந்து ஏட்டுப்பிரதிகளிலே கிடக்கும் திவ்விய நூல்களையும் தனிப்பாடல் முதலியனவற்றையும் வேறு மவசியமான பிறபாஷை நூல்களில் சிலவற்றை மொழிபெயர்த்தும் அச்சிட்டு வெளிப்படுத்துவதென்பதுவும் இவர்களது தீர்மானங்களி லொன்று. இவைகளெல்லாம் செவ்வனே நடப்ப எம்பிரான் திருவருள் பாலிப்பாராக.

இத் திருக்குறட் கழகத்தாரால் சைவசமயகுரவ சிரேஷ்டராகிய திருஞானசம்பந்த சுவாமிகளது குருபூசை சென்றபுதன்கிழமைகாலை மிகவுஞ் சிறப்பாகச் செய்யப்பெற்றது. சுவாமிகள்பெயரால் சென்றஞாயிற்றுக்கிழமை வெள்ளவத்தை மாணிக்கப்பிள்ளையார் கோயிலிலே திருவபிடேகமும், பூசையும் நடத்தப்பெற்று அங்கோர் மடத்தில் மகேசுரபூசையுஞ் சிறப்பாய் நிகழ்த்தப்பெற்றது. அத்தருணத்தில் கதாப்பிரசங்க சிகாமணி (பிரமஸ்ரீ சங்கரசுப்பையராகும்) சச்சிதானந்த ராஜயோகியவர்களும் சமுகமளித்து சம்பந்தசுவாமிகளது பாடல்களிற் சிலவற்றில் விசேஷ குறிப்புரை சுருக்கமாயெடுத்துக்கூறினர். திருவாளர் வேலுப்பிள்ளையவர்கள் சுவாமி சச்சிதானந்த ராஜயோகியவர்கள் கொழும்புக்கு வந்த முகாந்தரம் திருவாலங்காட் டிலுள்ளாருக்கு யாழ்ப்பாணக் கோவில்களி லிருக்கும் செய்கைத் தேர்போல ஒரு இலட்சம் ரூபாவரையிற் பெறுமதியான இரதம் ஒன்று செய்வித்து வைப்பதாக ஓர்மனவுறுதிபண்ணிக்கொண்டமையால் அதை நிறைவேற்றற்கு இங்குள்ளாரது பேருதவியை வேண்டி வந்திருக்கிறாரெனக் கூறி வந்திருந்த பலரையும் அரன்பணியே எப்புண்ணியங்களினும் விசேடமாகையால் அவருடைய திவ்விய எண்ணத்தைப் பூர்த்திபண்ணி யனுப்பிவைத்தால் சுவாமிகள் திரும்பவும் கொழும்புப் பட்டினத்திற்கே வந்து நமதுமொழிக்கும் சமயத்துக்குமாக உழைப்பாரென்று ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். தேவாரபாராயணத்துடன் மகேசுரபூசை முற்றுப்பெற்றது.

இக்கழகத்தாரால் மாணிக்கவாசக சுவாமிகளது குருபூசை மிக விசேஷமாய் நடத்துவதற்கு ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன.

சியாமளத்தன்.

வெள்ளவத்தை,
26—5—24.

## இந்திய சமாசாரம்.

**தென்னிந்திய புகைரத வேலை நிறுத்தம்.**

தென்னிந்தியாவிலுள்ள மதுரை தஞ்சாவூர் திரிச்சிரப்பள்ளி திருநெல்வேலி மாயவரம் முதலிய இடங்களிலுள்ள புகைரதவேலைப் பகுதியார் சென்றவாரம் வேலைநிறுத்தம் செய்திருக்கிறார்கள்.

### தலைவர்கள் முடிவு. II

தலைவர்கள் அறிக்கைகளைப்பற்றி சென்ற வெள்ளியன்று நாம் எழுதிய தலையங்கத்தில் அவ்வறிக்கைகளின் பொதுக் கருத்துக்களை எடுத்துக் காட்டினேம். அறிக்கைகள் வெளியிட்டிருக்கிறபடி காங்கிரஸிலுள்ள இரு கக்ஷியாரும் இனிச் செய்யவேண்டியவேலை ஒழுங்கை இனிக் கவனிப்போம். சுயராஜ்யக் கட்சியார் வேலைக்கு ஒருவித இடையூறும் செய்யக் கூடாது என்று மகாத்மா காந்தி குறிப்பிட்டிருப்பதையும், சுயராஜ்யக் கட்சியார் காங்கிரஸ் அனுமதியை உபயோகித்து சட்ட சபைகளுள் பிரவேசித்ததும் தடைவேலை நடத்துவதும் ஒழுங்குதான் என்று அவர் குறிப்பிட்டிருப்பதையும் மாறுதல் வேண்டாக் கக்ஷி நண்பர்கள் கவனிப்பார்கள் என்று நம்புகிறோம். நிர்மாண திட்டத்தில் முழுவேலைக்கும் இடமிருக்கிறது என்பதை தலைவர்கள் எல்லோரும் வற்புறுத்தியிருப்பது இருகக்ஷியாராலும் கவனிக்கத்தக்கது. மாறுதல்வேண்டாதார் நிர்மாண திட்ட வேலையை முக்கிய வேலையாகக் கைக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் அவர்களாலான அளவு சுயராஜ்யக் கக்ஷிக்கு உதவி செய்வதும் உசிதமே. மாறுதல் வேண்டாக் கட்சிப் பத்திரிகையான 'இந்தியன் நாஷனலிஸ்டு' என்ற பத்திரிகை சுயராஜ்யக் கட்சியாருக்கு மத்தியகால தேர்தல்களிலும் மற்றவிதங்களிலும் மாறுதல் வேண்டாதார் உதவி செய்யலாம் என்று குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கது.

சுயராஜ்யக்கட்சியார் வேலை முறை இவ்வறிக்கைகளில் வெகு தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'ஒத்துழையாமை' என்பது குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் சமயோசிதமாக உபயோகிக்க வேண்டியதொரு தத்துவம் என்பது சுயராஜ்யக் கட்சித் தலைவர்களது அபிப்பிராயம். அத்தத்துவம் கேவலம் ஒரு மனோநிலைமையாகாது. தவிரவும் தேசவிடுதலையே நமது நோக்கம். அந்தநோக்கத்தை அடைய அவசியமான நியாயமான வழிஎதையும் அனுஷ்டிப்பது முறையேயாகும். ஆதியில் ஒத்துழையாமை ஆரம்பிக்கப்பட்டகாலில் பஞ்சாப் பிரச்னை, கிலாபத்து அநீதி இவைகளைக் குறித்து நியாயம் பெறவும் சுயராஜ்யம் பெறவுமே அந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதேயன்றி ஒரு மனோநிலைமையை அடைவது கருத்தாகக் கொண்டு ஆரம்பிக்கப்படவில்லை. தற்கால சந்தர்ப்பத்தை உத்தேசிக்குமிடத்து சட்ட சபைகளுள் புகுந்து தடை வேலை செய்வதே நமது லக்ஷியத்துக்கு வழியாகும் என்பதே சுயராஜ்யக் கட்சியார் அபிப்பிராயம். ஆழ்ந்த தேச பக்தியும், தெளிவான அறிவும், அபாரமான தியாக புத்தியுமுள்ள பெரும் தலைவர்களால் சுயராஜ்யக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் பலர் பலவிதமான சந்தேகங்கள் கொண்டிருந்தார்கள். கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அதைச் சூழ்ந்திருந்த இருள் சில மாதங்களுக்குள் சிதறுண்டு போய்விட்டது. காங்கிரஸ் மகா சபையும் அக்கட்சிக்கு இடம் கொடுத்தது தேர்தல்களின் முடிவு சுயராஜ்யக் கட்சியார் முறையை நாட்டு மக்கள் முழுமனத்துடன் ஆதரிக்கின்றனர் என்பதைத் தெளிவாக்கியது. பிறகு சட்ட சபைகளுள் அக்கட்சியார் சென்ற நாள் முதல் ஒவ்வொரு நாளும் அவர்கள் செய்துவரும் வேலை அக்கட்சியின் வன்மையைத் தெளிவாக்கி விட்டது. அவர்களது முயற்சியால் சட்ட சபைப் பிரவேச தினம் முதல் சில தினங்களுக்குள் சீர்திருத்தம் சிதறுண்டு உருவழிந்து போய்விட்டது. ஆட்சிவர்க்கத்தார் இனி என்ன செய்வது என்பது தெரியாமல் யோசனையில் ஆழ்ந்திருக்கிறார்கள். காங்கிரஸினுடைய அனுமதியையும் தேச மகா ஜனங்களுடைய ஆதரவையும் பெற்றிருக்கும் இக்கட்சியார் வேலைக்கு இடையூறு செய்வது கூடாது என்று மகாத்மாகாந்தி ஆணைதந்துவிட்டனர். சுயராஜ்யக் கட்சியாரின் வேலை செழித்து நாடு நன்மை பெறுமாயின் அக்கட்சி வேலையால் நமது லக்ஷியம் கைகூடுமோ என்று சந்தேகிப்பவரும் சந்தேகம் தெளிவார்கள் என்று மகாத்மாஜி சொல்லியுள்ளார். தேச மகா ஜனங்களுடைய உதவியைக்கொண்டு சுயராஜ்யக் கட்சியார் சீக்கிரத்தில் நாடு நலம் பெறச் செய்து காரியசித்தி அடைவார்கள் என்று நாம் உறுதியாக நம்புகிறோம். சுயராஜ்யக் கட்சியார் கருமமே கண்ணாக சட்ட சபைகளுள் சென்றிருக்கின்றன ராதலின் எந்தக்கணம் இனிச் சட்ட சபையுள்ளிருப்பது பயனற்றது என்று விளங்கினாலும் உடனே வெளியேறிச் சாத்விக சட்ட எதிர்ப்புக்கு நாட்டைத் தயாரிப்பார்கள். வரவு செலவு திட்டத்தை எதிர்த்து நிராகரிப்பது அவசியமே என்று தேசபந்துவும் பண்டித மோதிலால்நேருவும் விடுத்துள்ள அறிக்கையில் கண்டிருப்பதை யாவரும் ஏற்றுக்கொள்வார்கள் விஷயங்களை ஆழ்ந்து நோக்காதவர் சிலர் நிர்மாண வேலையும் சட்ட சபை வேலையும் பரஸ்பர சம்பந்தமற்ற வேலைகள் என்று கருதி வருகிறார்கள். இது தப்பெண்ணம். நிர்மாண வேலையே தங்களது சட்ட சபை வேலைக்கு ஆதாரம் என்று சுயராஜ்யக் கட்சித்தலைவர்கள் அறிக்கையில் கண்டிருப்பது எல்லாராலும் உற்று நோக்கத்தக்கது. சட்ட சபையுள்ளும் நிர்மாண திட்டத்தைப் பரவச்செய்வதற்கான முறைகளை எவ்விதம் செய்யலாம் என்று மகாத்மாஜி காட்டியுள்ள முறைமையைசுயராஜ்யக் கட்சித் தலைவர்கள் ஏற்றுக் கொண்டு விட்டனர். நிர்மாணதிட்டத்தில் முழுமனதுடனும் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் சுராஜ்யக்கட்சியில்சேர்ந்து வேலைசெய்ய இடமிருக்கிறது என்பதைஇதற்கு முன்பும் நாம் காட்டியிருக்கிறோம். இப்பொழுது அதை மீண்டும் வற்புறுத்துகிறோம். சுயராஜ்யக் கட்சியார் நடத்தும் தடைமுறையைப் பற்றிச் சொல்லியிருக்கும் விரிவுரையும் கவனிக்கத்தக்கது. தேசம் விடுதலைபெற முயற்சித்துக் கொண்டிருக்கையில் அதற்கு விரோதமாக அதிகார வர்க்கத்தினர் செய்யும் சூழ்ச்சிகளைத் தடுப்பதே சுயராஜ்யக் கட்சியாரின் தடைவேலையாகும். இவ்விதத் தடை வேலை இதற்குள்ளாகவே நல்ல பயனளித்து விட்டது. இத்துடன் சுயராஜ்யக் கட்சித்தலைவர்கள், தொழிலாளர்களை குடியானவர்கள் இவர்களது சங்கங்களையும் ஒழுங்குபடுத்த எண்ணியிருக்கின்றார்கள். சுயராஜ்யக் கட்சியாரின் வேலை முறையைக் கவனித்து வந்திருப்பவர்கள் யாவரும் சில மாதகாலத்திற்குள் அக்கட்சியார் செய்திருக்கும் அருமையான வேலையை மெச்சுகிறார்கள். சுயராஜ்யக்கட்சியார் வேலைக்கு இடையூறு கூடாது என்று மகாத்மா அவர்களும அபிப்பிராயம் வெளியிட்டு விட்டார். எல்லா விதத்திலும் நிர்மாணவேலையையே மேல் நடத்துவதில் சுயராஜ்யக் கட்சியார் மிகுந்த ஊக்கம் கொண்டிருக்கிறார்கள் என்பது வெளிப்படை. பொது ஜனங்கள் அனைவரும் சுயராஜ்யக் கட்சியை பலமாக ஆதரித்து சமரஸ உணர்ச்சியுடன் தேசவேலையில் இறங்குவார்கள் என்று எதிர் பார்க்கிறோம். 26-5-24-சுதேசமித்திரன்.

---

### மத மாறுதல் ஒவ்வாதது.

(ஏசுநாதரின் அபிப்பிராயம்)

ஸ்ரீமான் ஸி. எப். ஆண்டிரூஸ் "யௌவன இந்தியா" பத்திரிகையில் பின்வருமாறு எழுதுகின்றார்:—ஹிந்து மதத்தினைச் சேர்ந்த தாழ்ந்த வகுப்பாரைக் கிறிஸ்துவமதத்திற்குச் சேர்க்கும் விஷயத்தைப்பற்றி எனனுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும்படி ஒரு பாதிரி எனக்குக் கடிதமெழுதிக் கேட்டுக்கொண்டிருக்கின்றார். ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்திற்கு ஜனங்களைக் கூட்டங் கூட்டமாக மாற்றும் விஷயமானது சமீபத்தில் தான் மிக்க முக்கியமானதாகப் போயிருக்கின்றது. இப்பிரச்சினையை உண்மையான முறையில் தீர்ப்பதைப் பொறுத்தே எதிர்காலத்தில் இந்தியாவிலுள்ள பல மதத்தினர்களுள்ளும் ஒற்றுமை ஏற்பட்டிருக்கும். நான் முக்கியமாக எனது கிறிஸ்துவ மதத்தினைப்பற்றியே இவ்வியாசத்தில் சொல்லிக்கொண்டு போவேன். ஆனால் இவ்வியாசத்தில் கூறப்படும் சில விஷயங்கள் மற்ற மதங்கள் சம்பந்தமாக உள்ள கஷ்டங்களைப் போக்குவதற்கும் பிரயோஜனப் படுமென்று நான் நம்புகின்றேன். எனக்குக்கடிதமெழுதிய பாதிரியாருக்கு நான் பின் வருமாறு பதிலளித்தேன்:—

இதுபோன்ற பிரச்சினைகளில் நாம் ஏசுநாதர் வாக்கியப்படி நடக்க வேண்டிய தவசியம். நாம் தற்காலத்திலுள்ள பாதிரிமார்களுடைய சம்பிரதாயமான எண்ணங்களைப் பின்பற்றி நடப்பதுடன் திருப்தி யடைந்துவிடக்கூடாது. ஏனெனில் இவை ஏசுநாதருடையஉண்மையான விருப்பத்திற்கு மாறாக இருக்கக்கூடும். "கடவுளுடைய விருப்பப்படி நடக்கின்றவர்களே என்னுடைய தாயும் சகோதரர்களும் சகோதரிகளுமாவர்" என்று ஏசுநாதர் தமது உபதேசத்தின் ஆரம்பத்திலேயே கூறியிருக்கின்றார். ஏசுநாதர் தமது வாழ்க்கையில் இவ்வுண்மையைஎவ்வாறு பின்பற்றி நடந்தார்கள் எனபதைக் காட்டுவதற்கு நமக்குப்பல உதாரணங்கள் இருக்கின்றன. ரோமர்களுக்குசுட்டியக் கூறியவர்களாக இருந்தவர்களுடையவும் சிறிய பினீஷிப் ஸ்திரீகளுடையவும் கிரேக்கர்களுடையவும் மதங்களை ஏசுநாதர் சந்தோஷமாக வரவேற்றார். இப்படியிருந்தும் இவர்களெல்லாம் வைதிகர்களான யூதர்களால் கேவலமான மிலேச்சர்களென்று கண்டிக்கப்பட்டனர். ஏசுநாதர் இவர்களை எல்லாம் யூதர்களாக மாற்ற முயற்சி செய்யவேயில்லை. அவர்களுடைய மதத்தினை அவரவர்கள் அனுஷ்டிக்கும் படிவிட்டுவிட்டு தாம் அவர்களிடையில் அவர்களுக்குஉபதேசங்கள் செய்து அவர்களது வாழ்க்கையைச் சந்தோஷமுள்ளதாகச் செய்வதுடன் திருப்தி யடைந்தார். ஏசுநாதர் காலத்தில் மதப்பற்றுள்ள யூதர்கள் பிறரைத் தங்கள் மதத்தினைத் தழுவும்படி செய்துவந்தனர். அதனை ஏசுநாதர் பார்த்திருக்கின்றார். அவர் அம்முறையை மிக்க பலமாகக் கண்டித்திருக்கின்றார். அது பற்றி அவர் பின் வருமாறு கூறியுள்ளார்:—"நாயசக்காரர்களே பரிசயர்களே (வைதீகயூதர்கள்) வெளிவேஷக்காரர்களே! நீங்கள் சமுத்திரத்தைக் கடந்து வேறு

மதத்தினர் ஒருவரை உங்களுடைய மதத்தில் சேர்ப்பதற்காக நீங்கள் உலகத்தையும் சுற்றி வளைத்துக்கொண்டு திரிகிறீர்கள். அவனை உங்களது மதத்தில் சேர்த்தபின் அவனை உங்களை விடப் பெரும்பாவிஷ்டர்களாக நீங்கள் செய்து விடுகின்றீர்கள்."

ஏசுநாதர் தீர்ப்புக்கூறும் நாளைப்பற்றிக் கூறுகையில் தமது முடிவான அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கின்றார். அது காலே அவர் கர்த்தரிடம் நம்பிக்கை கொண்டிருப்பதாகச் சொல்லிக்கொண்டு அன்பில்லாத முறையில் வாழ்ந்து வருகின்றவர்களைப் பார்த்து "உங்களை நான் எப்பொழுதுமறியேன்" என்று கூறுகின்றார். தமது நாமதேயத்தையே கேட்டறியாதவர்களாயும் ஆனால் அடக்கப் பட்டவர்களாயும் உள்ள மானிடர்பால் அன்பு கொண்ட மனத்தினை உடையவர்களாயும் பரிசுத்தமான வாழ்க்கையை உடையவர்களாயும் உள்ளவர்களைப் பற்றி அவர் தீர்ப்புக் கூறும் நாளில் கூறுவதாவது:—என் தாதை யருளிய பாக்கியவான்களான சகோதரர்களே வருக! வருக! நீங்கள் பசித்தவர்களுக்கு அன்ன மளித்தீர்கள். தாகத்தால் வருந்தியவர்களுக்குத் தாக சாந்தி செய்வித்தீர்கள். நிர்வாணமாக இருந்தவர்களுக்கு ஆடையளித்தீர்கள், நோயாளிகளாகவும் சிறைப்பட்டவர்களாகவும் உள்ளவர்களைக்கண்டு அவர்களுக்குவேண்டிய சௌகரியஞ் செய்தீர்கள். நீங்கள் என்னுடைய சகோதரர்களில் மிக்க கேவலமானவர்களுக்குச் செய்த சேவை எல்லாம் எனக்குச் செய்த சேவையே யாகும். ஆதலின் நீவிர் வருக! வருக! "எனக்குத் தெரிந்தவரை இதுவே மானிடவாழ்க்கையின் இலக்ஷியத்தைப்பற்றி ஏசுநாதர் கொண்டிருந்த அபிப்பிராயத்தைக் காட்டுகின்றதென்று நினைக்கின்றேன். செயின்ட் ஜேம்ஸ் என்பவர் மதத்தினைப் பற்றிக் கூறும் வியாக்கியானத்திற்கும் இது ஒத்ததாக இருக்கின்றது.

### எது உண்மையான மதம்?

அவர் கூறுவதாவது:—"தகப்பனற்ற குழந்தைகளுக்கும் விதவைகளுக்கும் அவர்களுடைய கஷ்டதிசையில் உதவி புரியவேண்டும். பூலோக வாழ்க்கையை நாம்களங்கமற்றமுறையில் நடத்த வேண்டும். இதைத்தான் கடவுளும் கர்த்தரும் உண்மையான மதமென்று கருதுகின்றனர். ஆதலால் மிஷனரியின் பிரகாரத்தைப் பற்றி ஏசுநாதர் கொண்டுள்ள அபிப்பிராயத்தைத் தாங்கள் மிக்க கவனமாகப் படித்தால் அவர் ஒரு மதத்தினரை வேறு மதத்திற்குமாற்றுவதை அடியோடு எதிர்த்தார் என்பதைக் காண்பீர்கள். அவர்கள் கூட்டங் கூட்டமாக ஜனங்களைத் தங்கள் மதத்திற்கு மாற்றி வருகின்றபோதிலும் ஏசுநாதர்அம்முறையை அனுஷ்டிக்க வில்லை என்பதையும் தாங்கள் காண்பீர்கள். ஏசுநாதர் இதைவிட ஒருபடி அதிகமாய்ப் போய் அவர் கூறுவதாவது:—"என்னைக் கர்த்தர் கர்த்தர் என்று கூறுகின்றவர்கள் ஒவ்வொருவரும் மோக்ஷலோக மடையமாட்டார்கள். ஆனால் எனது பிதாவான கடவுளுடைய விருப்பப்படி நடக்கின்றவர்களே மோக்ஷலோக மடைவர்:— வரும்.

"சுதேசமித்திரன்"

---


## விளம்பரம்.

எனது மகள் சின்னம்மா விவாகஞ்செய்து பிள்ளைகளில்லாதபடியாலும் இப்போ சொஞ்சக்காலமாய் குணபேத மிடைக்கிடை வருகிறபடியாலும் அந்தநேரங்களில் புருஷன் சிதம்பரநாதர் சின்னத்தம்பி முன் கொள் விலைக் காணியை அவனை அனுப்பி விற்று விட்ட படியாலும் இப்போ சீதனக்காணியையும் தன் பேருக் கெழுதிவிக்க ஆயித்தப்படுத்துகிறபடியாலும் எக்க சொத்தரிசுவாவது ஒரு சாதனமும் பிறப்பிக்கப்படாதென்பதைத் தெரிவிக்கிறேன்.

ஆறுமுகம் சின்னப்பா,
கைதடி நாவற்குழி,
(Mis. 483) நாவற்குழி.

[☞ இந்த விளம்பரத்தின் கைச்சாதது ஆறுமுகம் சின்னப்பா என்றிருப்பதற்குப் பதிலாக ஆறுமுகம் சின்னத்தம்பியென இப்பத்திரிகையின் மேமீ 29ந் திகதிப் பிரசாரத்திலும் ஜூன்மீ 2ந் திகதிப் பிரசாரத்திலும் தவறுக வெளிவந்துவிட்டபடியால் அபிமானிகள் அதனைத் திருத்திக்கொள்வார்களாக.
—பத்திராசிரியர்].

---

## ஞானோதய வாசிகசாலை.

இது யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை மூத்தநயினார்கோயில் வடக்கு வீதியில் ச. பஞ்சாட்சரக்குருக்களாகிய என்னுடைய கிருகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதில் 1000 ரூபா வரையிற் பெறுமதியான சைவ, வைஷ்ணவமதங்களுக்குரிய புத்தகங்கள். எவரும், எளிதில் வாசிக்கக் கூடிய ஏற்பாட்டுடன் வைக்கப்பட்டிருக்கின்றன. இதை விருத்தி செய்தற்குத் தமிழகத்தார் யாவரும் தக்க பொருளுபகரிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ச. பஞ்சாட்சரக்குருக்கள்.
(Mis. 490.) ஆனைக்கோட்டை,

---

## அஷ்டபந்தன மருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட சுவாமிக்குச் சாத்தும் அஷ்டபந்தனமருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

சு. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
(H. 21) வண்ணார்பண்ணை.

---

## தேக்க மரம்.

றங்கூனிலுள்ள பேர்போன அங்கில கொம்பனியாரிடமிருந்து புதிதாக வருவிக்கப்பெற்றதிறமான தேக்கமரங்கள். நீளம் 6 அடி தொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம் வரையிலுள்ளன. இவைகள் எம்மிடத்தில் விலைக்கிருக்கின்றன, விலைவிபரத்திற்கு எமக்கெழுதவும்.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானாறு.

தந்திவிலாசம்:—
ஹாபி, வல்லுவெட்டித்துறை.
(H. 29.)

---

## விளம்பரம்.

| | | ரூ. ச. |
|---|---|---|
| எக்சர்சைஸ் கொப்பிகள் | குரோஸ் விலை | 16-50 |
| | டசின் ,, | 1-50 |
| | தனிக்கொப்பி ,, | 13 |

இன்னும் கல்லூரிகள் தமிழ்ப்பாடசாலைகளுக்குத் தேவையான புத்தகங்கள் மற்றுங்கொப்பிகள் இவ்விடம் மலிவாகக் கிடைக்கும்.

## பிரேதப் பெட்டிகள்.

தேக்கம்பெட்டி, முதிரைப்பெட்டி, பலாப்பெட்டி, மற்றும் சாதாரண பெட்டிகள் சோடினை தைத்தும் தையாமலும் விற்பனைக்கிருக்கின்றன.

ம. வஸ்தியாம்பிள்ளை,
(M. 34).) கச்சேரித்தெரு, யாழ்ப்பாணம்.

---

## திறமானமங்களூர்ஓடுகள்

மெஸ்சேர்ஸ் மோர்க்கன் அன்கோ அல்வாரிஸ் அன்கோ திறமோடுகளும் அரையோடுகள், முகட்டோடுகள், காற்றோடுகள், பீலியோடுகள், கண்ணாடியோடுகள், சித்திர சகிதமானஓடுகள் தளவரிசைக்கற்கள், பூச்சட்டிகள் திறம் போட்லாந்து சிமெந்து முதலானவைகளும் சகாயமான விலைக்குப் பின்வரும் விலாசத்தாரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கா. வ. சுப்பிரமணியம்,
ஒட்டுக்கம்பெனி,
தேவரீர்குளம்,
(H. 23). யாழ்ப்பாணம்.

---

பல தலைமுறையாய் பிரபலபிரசித்தியடைந்த
வீ. ஸாமி அய்யங்காருடைய
## அரைக்கீரை விரைத் தைலம்.



இதன் குணம்:

பித்த மேகநீரானது சிரசுக்கேறி அதனால் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினால் சீழ்வடிதல், காது இரைச்சல், காதுவலி, ஐந்துவருஷத்திற் குட்பட்டதாயும் இரைச்சலோடு கூடிய காதடைப்பு, கரப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், சொண்டுவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும். இந்த நோட்டீசில் காணப்படாத கழுத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளையும் அனுகூலப் படுத்தும். மேறகண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்து ஸ்நானம்பண்ணினால் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயாக்காய்தேய்த்துஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்து கொள்ளவேண்டும். 8 நாள்வரையிலும் சுகந்தம் மாறாது. அன்று பகலில்மாத்திரம் தூங்கக் கூடாது. 10 பலங் கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0.

பாக்கிங் போஸ்டேஜ் பிரத்தியேகம். வெளிநாடுகளுக்கு வி. பி. இல்லாததால் முன்பணம் அனுப்பவேண்டும்.

வி. எஸ். கோமளத்தம்மாள்,
மானியுபாக்ஷரர்,
8, பிராடீஸ் ரஸ்தா, மைலாப்பூர்.
(Y. 26.)

---

இனும்! இனும்!! இனும்!!!
இதனடியில் கண்ட மருந்து வாங்குகிறவர்களுக்கு மட்டில்

வைத்திய சாஸ்திரத்தில் அதிக அனுபவமுள்ள ஹக்கிம் K. முகம்மது யூசுபு அவர்களால் செய்யப்பட்ட (வைத்திய சாஸ்திர நீதிநூல்) 96 பக்கம் அடங்கிய புஸ்தகம் ஒன்று இம்மருந்துடன் இனாமாக அனுப்பப்படும். மானிட சரீரத்தில் பரவும் பல நோய்கள் வீரியபலஹீனங்கள் நரம்புத் தளர்ச்சிகள் வீரிய நஷ்டத்தின் விபரங்கள் அது ஜனித்த காரணங்களையும் அதன் குணங் குறிகளையும் அதற்கு மருந்தும் பரிகாரமும் சரீரத்தில் உள்ள சில ரகசியமான விஷயங்களையும் வைத்தியரிடம் வெளிப்படுத்தாமல் தனக்குத் தானே அறிந்துகொள்ளக்கூடிய அருமையானதோர் சாஸ்திரமாயிருக்கின்றது.

அவுஷதங்களில் அருமையான வித்தை.
ஜெகப்பிரசித்தி பெற்ற
## சிட்டுக்குருவி அமிர்த லேகியம்.

பலமில்லாமல் தளர்ந்து சோர்வடைந்த நரம்புகளையும் உலக வாழ்க்கையில் பிரியமில்லாமல் சஞ்சலப்படும் மனதையும் ஒருவேளை லேகியம் சாப்பிட்ட பிறகு ஆச்சரியப்படும்படி நரம்புகளுக்குப் பலமும் திமிரும் உண்டாக்கும்.

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதமுள்ள உண்மை அவுஷதம்
குணமில்லையென்று ரூபிக்கிறவர்களுக்கு பணத்தைத் திருப்பிக் கொடுக்கப்படும்.

வீரியபுஷ்டியையும் மன உற்சாகத்தையும் கொடுப்பதில் இதற்குச் சமயாய் எதைக் காட்ட முடியும். இதனை அனுபவித்தவர்கள் இப்பெருமை தங்கிய மருந்திற்கு உள்ள அபூர்வசக்தியைப் போலே இவ்வுலகத்தில் வேறு எந்த மருந்திற்கும் இல்லையென்று அனேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எழுதியிருக்கிறார்கள்.

அன்பனே! இதுவரையிலும் வீரியதத்துவத்திற்காகவும் நாடி நரம்புகளின் உற்சாகத்திற்காகவும் மூளையைப் பலப்படுத்தி ஞாபகசத்தியை விர்த்திசெய்யவும் தேககாங்கையினால் நீற்றுப்போகும் பலஹீனம் பற்பல வாய்வுரோகம் இடுப்புவலி கைகாலசதி மலச்சிக்கல் பசிமந்தம் இவைகளுக்செல்லாம் எத்தனையோ விதமான அவுஷதங்கள் சாப்பிட்டிருப்பீர்கள். அவைகளுக்கெல்லாம் இது முதல்தரமான மருந்தென்று தங்களின் சிநேகிதர்பால் புகழ்ந்து பேசுவீர்கள். பத்தியமில்லை.

முக்கிய கவனிப்பு:—சில போலி சிட்டுக்குருவி லேகியங்கள் ஆயிரக்கணக்கான ரூபாய் இனுமென்று சபதங்கள் கூறிக்கொண்டு பல விளம்பரங்கள் வெளிவந்துகொண்டிருக்கிறபடியால் எமது விலாசத்தைக் கவனித்து ஆடர் செய்யவேணும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 40 நாள் | 80 வேளை | டப்பி 1க்கு | விலை | ரூபா | 10—0—0 |
| 20 ,, | 40 | ,, | ,, | ,, | ,, | 5—0—0 |
| 10 ,, | 20 | ,, | ,, | ,, | ,, | 2—8—0. |

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

இந்தியா, பர்மா, சிலோன் இம்மூன்று தேசங்களுக்கும் வி. பி. யில் மருந்து அனுப்புவோம. பினங்கு, சிங்கப்பூர், மற்ற மலாய் தேச வாசிகள் மருந்தின் கிரயமும், பார்சல் சிலவு ரூபா 2ம் சேர்த்து முன்பணம் அனுப்பினால் மட்டில் மருந்து அனுப்பப்படும்.

விலாசம்.

ஹக்கிம் கா. முகம்மது யூசுபு,
முகம்மதியா வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, (தென்னாற்காடு ஜில்லா)
(H. 27.)

Hakeem K. Mohamed Yoosoof,
*Mohamedia Medical Hall,*
Porto-Novo, S. A. Dt.(INDIA.)

---

4 மாசத்தில் 200 குஷ்டரோகிகள் சொஸ்தமடைந்து விட்டார்கள்!
திமிர், குஷ்டம், தீர்ந்து விட்டன!
மதமதப்புமாரி சொரணையுண்டாகி விட்டன.
தடிப்புகள் மாறிவிட்டன, பத்துகள் மறைந்து விட்டன,
சொரிகள் உதிர்ந்து விட்டன, அரிப்புகள் மாறிவிட்டன,
ரணங்கள் ஆறிவிட்டன,
குன்மம், கிரந்தி, மேகமெல்லாம், தீர்ந்து, விட்டதென்று தினம்
நற்சாக்ஷிகள் வந்தவண்ணமாயிருக்கின்றன.
ரிஜிஸ்டர் செய்யப்பட்டது
அநேக நற்சாட்சிகளும் தங்கமெடலும் பரிசு பெற்று
உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

25-8-1923-ல் சென்னையில் நடந்த வைத்திய கான்பரன்ஸ் மருந்து வைத்திய கண் காட்சியில் இவர் மருந்துகள் பஸ்ட் கிளாஸ் தேவ ஔஷதங்களென்று தங்க மெடலும் வைத்திய ஆசிரியர் என்று பட்டமும் பெற்றவர்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். உத்தரவாத முள்ளது. குணம் இல்லை என்பவர்களுக்கு பணம் திரும்பக்கொடுக்கப்படும். வைத்திய சாஸ்திரத்தில் மகா நிபுணர்: முப்புவைக் கண்டுபிடித்தவர்.

## தாம்பர பஸ்பம்.

சகல வியாதிக்கும் கைகண்டது.
முப்புவினால் தளுக்கற நீற்றியது. களிம்பற்றது.
வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாதது பத்தியமில்லை.
வியாதிகளை விபரமாய் எழுதவும்.

• உங்கள் வியாதிகளை மறுமுறை திரும்பிவராமல் நிவர்த்திக்கும் வல்லமை யுடையது.

20-வருஷ காலமாய் அனேக வியாதிகளுக்குக்கொடுத்து அனுபவமுள்ளது. இந்த மருந்தினால் தீராத வியாதிகள் கிடையாது. சகல வியாதிகளுக்கும் இந்த ஒரே மருந்து போதும்! ஒருமருந்துக்கும் வசப்படாத வியாதிகளெல்லாம் இந்த மருந்தில் தீருவது வெகு ஆச்சரியமாக இருக்கிறது. திடீரென்று சம்பவிக்கக் கூடிய ஆபத்தான சகல வியாதிகளையும் யாவரும் பிரமிக்கும்படி வெகுசீக்கிரத்தில் நிவர்த்திக்கும். சீக்கிரத்தில் குணப்படுத்துகிறதை பார்க்கும்போது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. ஜுரம் 64-ஜன்னி 13-தோஷம் 7-ம் ஜாஸ்தியாகி எந்த மருந்திலும் தீராத சமையம் உட் கொண்டால் அந்த க்ஷணமே நிறுத்தும் 3-நாள் மருந்தே போதும். வெகு சீக்கிரம் பிரமிக்கும்படி வாய்வு 300-ம் இதில் அவசியம் தீரும்; வைத்தியர் தேவையில்லை. மேக நீரினால் பொறுக்கமுடியாத கைகால் குடச்சலை உடனே நிறுத்தும். குறை நோய் சம்பந்தமான ஆராதமணங்களும், விரல்கள் அழுகிப்போயிருந்தாலுஞ்சரி அந்தமட்டில் புண்கள் ஆறிவிடும். பின் புண்ணாகாது. எந்த மருந்திலுந் தீராத எவ்வளவு நாள்பட்ட கிரந்தி, புண் புரைகளும இதில் அவசியந் தீரும்; வெட்டை, முத்தி மொழிகளில் சூலை, வீக்கம், வலி, கை கால் குடைச்சல் கிரந்தி, நமைச்சல், மேக ஊரல், பத்து, அரிகிரந்தி, தடிப்பும் நரம்பு பிடித்து கை கால் முடக்கிவிடும் மேக வியாதிகளும் இதில் அவசியம் தீரும். ஜுரம், 64 ஜன்னி, 13 தோஷம், 7 வாயு, 26 மேகம், 21 குஷ்டம், 18 சூலை, 18 கிரந்தி, 6திமிர், 10 குன்மம், 8 இருமல், 8 க்ஷயம், 6 காசம், 8 மூலம், 9 பவுத்திரம், அரையாப், 8 கண்டமாலை, 9 திராணி, 6 விஷநீர், 4 விக்கல், 8 வெடிப்பு ரணம், வெள்ளை, வெட்டை, சுந்திமேகம், எரிச்சல், கடுப்பு, நீரடைப்பு, கல் அடைப்பு, ஆறுதபுண், புரை, குழிபுண், புற்றுக்கட்டி, பிளவை, காக்கை வலிப்புகள், பக்கவாதம், நடுக்குவாதம், மதிமதப்பு, சூதகவாய்வு, வயிற்றுவலி முதலியசகலவித கர்ம வியாதிகளும் கண்டிப்பாய்த் தீரும். அனுபவத்தில் கை கண்ட அருமையான மருந்து. 80 வேளை ரூபா 40; 40 வேளை ரூபா 20; 20 வேளை ரூபா 10; ஏழைகட்கு பாதி விலை.

வைத்திய ஆசிரியர்.
R. M. K. வேலுசாமிபிள்ளை,
(Y. 31.) சித்த ஆயுள்வேத வைத்யசாலை, பழனி.


---

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

---

Printed and published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.